BBC

# ஸ்டெர்லைட்: "தூத்துக்குடி எரிந்த தினம்" அறிக்கை வெளியிட அறிவிக்கப்படாத தடையா?

15 ஜூலை 2018

**தூத்துக்குடியில் மே மாதம் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எதிரான போராட்டத்தில் வன்முறை வெடித்ததாக கூறி காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியது குறித்து, பல்துறை ஆய்வாளர்கள் ஒரு அறிக்கையை வெளியிடும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்னைக்கு வரவிருந்தவர்கள் சிலர் தடுத்து நிறுத்தப்பட்டதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.**




'தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டிற்கு எதிரான கூட்டமைப்பு' என்ற பெயரில் அறுபதுக்கும் மேற்பட்ட பல்துறை ஆர்வலர்கள் களஆய்வுக்குப் பின் உருவாக்கிய அறிக்கையை சென்னையில் வெளியிட ஏற்பாடு செய்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு அறிவிக்கப்படாத தடை இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

## "சிவகாசி அச்சுக்கூடங்களில் தடை?"

கடந்த மே22ம் தேதி ஸ்டெர்லைட் நிறுவனத்தை மூடக்கோரி பொதுமக்கள் நடத்திய நூறாவது நாள் போராட்டத்தின்போது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 13 பேர் இறந்ததாக அரசு அறிவித்திருந்தது.

இந்த போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டிற்கு எதிரான கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், துப்பாக்கிச்சூடு நடந்தபோது அரசு அதிகாரிகளால் மீறப்பட்ட விதிமுறைகள் மற்றும் தொடரும் கைது நடவடிக்கைகள் பற்றியும் அறிக்கை தயாரித்தனர்.

- **ஸ்டெர்லைட் கந்தக அமில கசிவால் பாதிப்பா? பேராசிரியர் கருத்து**
- **ஸ்டெர்லைட்: காணாமல் போனார்களா போராட்டக்காரர்கள்?**

"தூத்துக்குடி எரிந்த தினம்" என்ற தலைப்பில் அந்த அறிக்கையை வெளியிட பல இடர்பாடுகள் இருந்ததாகப் பட்டியலிட்டார் ஹென்றி டிஃபென்.

'200க்கும் மேற்பட்ட ஆவணங்களைக் கொண்டு இந்த அறிக்கையை வடிவமைத்தோம். இந்த புத்தகத்தை அச்சடிக்க சிவகாசியில் பல அச்சகங்கள் மறுத்துவிட்டன. அரசு அதிகாரிகளின் நேரடி பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னர்தான் ஸ்டெர்லைட் தொடர்பான எந்த புத்தகத்தை அச்சடிக்க முடியும் என அச்சுக்கூடத்தினர் தெரிவித்துவிட்டனர். இதன் காரணமாக நாங்கள் புத்தகத்தை அச்சடிப்பதற்கு பதிலாக நகல் எடுத்து வெளியிடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்." என்று சமூக செயற்பாட்டாளர் ஹென்றி டிஃபென் தெரிவித்தார்.

மேலும் நிகழ்ச்சிக்கு வந்த தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்களின் வீடுகளுக்கு காவல்துறையினர் சென்று எச்சரிக்கை விடுத்ததாக தெரிவித்தார்.



## தூத்துக்குடியில் தொடரும் கைதுகள்

பிபிசிதமிழிடம் பேசிய ஸ்டெர்லைட் எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் பாத்திமா பாபு, தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிக்கு வருவதற்காக மூன்று பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றும் பேருந்து நிறுவனத்தினரை காவல்துறை அச்சமூட்டியதால், பலர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளமுடியாமல் போனது என்று கூறினார்.

"நிகழ்ச்சிக்கான வேலைகளை செய்வதற்காக இரண்டு நாட்களுக்கு முன்னதாக நான் சென்னை வந்துவிட்டேன். போராட்டத்தின்போது பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து தங்களது அனுபவங்களை நேரடியாக பகிர்ந்துகொள்வதாக இருந்தது. ஆனால் பேருந்து நிறுவனத்தை பயமூட்டி, அந்த மக்களை நேற்று மாலை பயணம் செய்யமுடியாத வண்ணம் செய்துள்ளனர்" என்று கூறினார்.



நிகழ்ச்சியில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹரிபரந்தமன் தூத்துக்குடி போராட்டத்தில் இறந்தவர்களின் குடும்பங்கள் இணைந்து இரங்கல்கூட்டம் நடத்துவதற்கு கூட அனுமதி மறுக்கப்படுகிறது என்றார். தற்போதும்கூட தூத்துக்குடியில் நள்ளிரவில் கைதுகள் தொடர்வதாக கூறினார்.

"இந்த நிகழ்ச்சியில் பேசியவர்கள் தற்போதும் தூத்துக்குடியில் இளைஞர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுகிறார்கள் என்பதற்கு சாட்சியாக உள்ளார்கள். நாங்கள் நேரடியாக மக்களை சந்தித்தபோது, பலர் போராட்டத்தின்போது காயம் அடைந்திருந்தாலும் மருத்துவமனைக்குச் சென்றால் அவர்கள் மீது வழக்கு பதிவாகுமோ என்ற அச்சத்தில் இருப்பதைப் பார்க்கமுடிந்தது. அரசாங்கம் யாருக்காக செயல்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. ஸ்டெர்லைட் நிறுவனத்தை அரசாங்கம் மூடியது உண்மை என்றால், ஏன் இந்த கூட்டத்திற்கு

மக்கள் வருவதை தடைசெய்கிறார்கள்?" என்றார்.

- **ஸ்டெர்லைட் விவகாரம்: குளறுபடிகளுக்கு யார் காரணம்?**
- **ஸ்டெர்லைட்: விதிமுறைகளின்படி நடத்தப்பட்டதா துப்பாக்கிச் சூடு?**

"தூத்துக்குடி எரிந்த நாள்" என்ற அறிக்கையில் பொது மக்களை கலைப்பதற்காக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்பது தவறு என்றும் அது திட்டமிட்டு நடத்தப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக நேர்மையான ஆய்வை நடத்த மூத்த அதிகாரிகளை தமிழக தலைமைச் செயலாளர் நியமிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

"துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் உடற்கூறு ஆய்வு அறிக்கை அந்த குடும்பங்களிடம் தரவேண்டும். ஸ்டெர்லைட் நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்கான பலமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்," என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிற செய்திகள்:

- **சௌதி அரேபியா: ஆண் பாடகரை கட்டிப்பிடித்த பெண் கைது**
- **திருமணத்துக்கு வெளியே உறவுகொள்ளும் பெண் குற்றவாளியா? பாதிக்கப்பட்டவரா?**
- **"என்னை நிந்திப்பது ஏன்?" - கண்ணீர்விட்ட கர்நாடக முதல்வர் குமாரசாமி**
- **எரிபொருள் விலை ஏற்றம்: மக்கள் போராட்டத்தை அடுத்து பதவி விலகிய பிரதமர்**

சமூக ஊடகங்களில் பிபிசி தமிழ் :

- **பிபிசி தமிழ் ஃபேஸ்புக்**
- **பிபிசி தமிழ் ட்விட்டர்**
- **பிபிசி தமிழ் இன்ஸ்டாகிராம்**
- **பிபிசி தமிழ் யு டியூப்**

## தொடர்புடைய தலைப்புகள்

ஸ்டெர்லைட் | காவல் | தமிழ்நாடு

# இந்த செய்தியைப் பகிர்க பகிர்வது பற்றி

மீண்டும் மேலே செல்க

## முக்கிய செய்திகள்

### இரான் மீது தடை: ஐரோப்பிய நிறுவனங்களுக்கு விலக்களிக்க அமெரிக்கா மறுப்பு

இரானுக்கு எதிரான அமெரிக்காவின் தடைகளில் இருந்து ஐரோப்பிய நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியம் வைத்த கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

16 ஜூலை 2018

### உங்கள் தலைக்கு எப்படி பேன் வருகிறது தெரியுமா? (காணொளி)

16 ஜூலை 2018

### 'பேரன்பு' அதிசயிக்கத்தக்க சினிமாவெல்லாம் இல்லை : இயக்குநர் ராம்

16 ஜூலை 2018

## சிறப்புச் செய்திகள்



### 2014 காஸா போருக்கு பிறகு ஹமாஸ் மீது 'மிகப்பெரிய தாக்குதல்' - இஸ்ரேல் பிரதமர்




**மிரட்டிய ஜோ ரூட்; சொதப்பிய இந்திய அணி; அசத்திய டோனி - 5 தகவல்கள்**




**சேலம் 8 வழிச்சாலை போன்ற திட்டங்கள் தொழில் வளர்ச்சிக்கு தேவை - ரஜினிகாந்த்**



சௌதி அரேபியா: ஆண் பாடகரை கட்டிப்பிடித்த பெண் கைது



பிபிசி தமிழ் நேயர்களின் பிரமிக்கும் ‘குறிஞ்சி’ நில படங்கள்



'டைம் மிஷின்': காலத்தில் பின்னோக்கி பயணிக்க முடியுமா?




புற்று நோய் பாதிப்பு: ஜான்சன் & ஜான்சன் 4.7 பில்லியன் டாலர் இழப்பீடு வழங்க உத்தரவு



**பச்சிளம் பருவத்திலேயே நீரழிவு நோயைத் தடுக்க பிரிட்டனில் மருத்துவர்கள் புது ஆய்வு**



**பறக்கும் கார்கள்: குறைந்த விலையில் ஓர் அட்டகாச முயற்சி**

## அதிகம் படிக்கப்பட்டவை

பாதாம், முந்திரி தின்று வந்தால் விந்தணு சக்தி அதிகரிக்குமா? **1**

'டைம் மிஷின்': காலத்தில் பின்னோக்கி பயணிக்க முடியுமா?

2

இங்கிலாந்தின் அதிர்ச்சி தோல்வியும் குரேஷியாவின் சாதனை வெற்றியும் - 8 தகவல்கள் 3

'பேரன்பு' அதிசயிக்கத்தக்க சினிமாவெல்லாம் இல்லை : இயக்குநர் ராம் 4

பிரிட்டன்வாழ் சிறந்த இந்தியராக 8 வயது சிறுவன் தேர்வு 5

## பிபிசி இணைய தளத்தில் செல்ல

News

Weather

Sport

Radio

பயன்பாட்டு விதிமுறைகள்

அந்தரங்கக் கொள்கை

மாற்றுத் திறனாளிக்களுக்கு உதவி

பிபிசியுடன் தொடர்பு கொள்ள

எங்கள் பக்கங்களில் விளம்பரம் செய்யுங்கள்

விளம்பர வாய்ப்புகள்

பிபிசியைப் பற்றி

Cookies

Parental Guidance

Get Personalised Newsletters

**Copyright © 2018** பிபிசி. வெளியார் இணைய தளங்களில் காணப்படும் விஷயங்களுக்கு பிபிசி பொறுப்பாகாது. வெளியார் இணைய தளங்களை இணைப்பது, மற்றும் தொடர்புகள் குறித்த எமது அணுகுமுறை